**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of BNSS)**

**DVC. No. 27/2025**

Name : கிஸ்வர் பாத்திமா  Date : 03.03.2026

Husband Name : அலீல் ரஹ்மான் :

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**எதிர்மனுதார்கள் தரப்பு குறுக்கு விசாரணை:-**

1. எனக்கும் எதிர் மனுதாரருக்கும் இடையே திருமணம் நடைபெறும் போதே எனது மாமியார் இறந்துவிட்டார் என்றால் சரிதான். நான் எனது மாமனார் மற்றும் எதிர்மனுதாரர்கள் கூட்டு குடும்பமாக வசித்து வந்தோம் என்றால் சில நாட்கள் வசித்து வந்தோம். 11.08.2008 அன்று எனது திருமணம் நடந்தது என்றாலும் எனது கணவர் 25.09.2008ல் வெளிநாடு சென்றார் என்றாலும் சரிதான். 10.12.2009 அன்று எனது கணவர் மீண்டும் வெளிநாடு சென்றார் என்றால் சரிதான். அதன் பின்னர் 1 -2 வருடங்கள் கழித்து வந்தார். அந்த காலகட்டங்களில் நான் எதிர் மனுதாரர்களுடன் கூட்டுக்குடும்பமாக தான் வசித்து வந்தேன் என்றால் சரிதான். அதன் பின்னர் எனது கணவர் என்னை மாடியில் தனிகுடுத்தனம் வைத்தார் என்றால் சரியல்ல.

2. எனக்கு கடந்த 11.10.2009ல் ஆண் குழந்தை பிறந்தது. எனது கணவர் என்னையும் எனது குழந்தையையும் சவுதிக்கு அழைத்து சென்றார் என்றால் சரிதான். எனது மகனை பள்ளியில் சேர்த்தாரா என்றால் சேர்த்தார். அங்கு நான் கருவுற்ற பிறகு என்னை எதிர் மனுதாரர் இந்தியாவிற்கு அனுப்பி வைத்தார் என்றால் சரிதான். நான் எனது மகனுடன் இந்தியாவிற்கு வந்த பிறகு எங்கு தங்கி இருந்தேன் என்றால் எனது அம்மா வீட்டில் தங்கி இருந்தேன். அதற்கு பின்னர் நான் எதிர் மனுதாரர் வீட்டிற்கு செல்லவில்லை என்றால் நான் அங்கு செல்வதற்காக போன் செய்தேன். ஆனால் அங்கு உள்ளவர்கள் எனது போனை

எடுக்கவில்லை. எனது அம்மா வீட்டிற்கு எதிர் மனுதாரர் வருவாரா என்றால் வரமாட்டார். இது சம்பந்தமாக பஞ்சாயத்தார்கள் மூலம் பேசினோமா என்றால் இல்லை. அவரது அண்ணன் மனைவி மூலம் பேசி எதிர் மனுதாரர்களும் நானும் சமாதானம் ஆனோம். பின்னர் நானும் எதிர்மனுதாரரும் எனது மாமியார் வீட்டில் வசித்தோம்.

3. என்னையும் எனது குழந்தைகளையும் எனது கணவர் வெளிநாட்டிற்கு அழைத்து சென்றாரா என்றால் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பஞ்சாயத்து பேசி அழைத்து சென்றார். சவுதியில் நான் எதிர் மனுதாரருடன் 1 ½ ஆண்டு காலம் வாழ்ந்து வந்தேன். எதிர்மனுதாரர் சவுதியில் என்னை அழைத்து சென்று 52 பவுன் தங்க நகைகள் மற்றும் தங்க கட்டிகளை வாங்கிகொடுத்தாரா என்றால் இல்லை. இந்தியா வந்த பிறகு நான் எனது அம்மா வீட்டிற்கு வந்தேன் என்றால் சரிதான். அங்கு எதிர்மனுதாரர் என்னுடன் பிரச்சனை செய்ததால் நான் எனது அம்மா வீட்டிற்கு வந்தேன். எனது கணவர் அவரது ஊர் தைக்கால் பஞ்சாயத்தில் மனு கொடுத்து அதன் பேரில் ஆயப்பாடி பஞ்சாயத்தார்கள் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். அந்த பஞ்சாயத்தில் "பல தடவை பேச்சுவார்த்தை நடத்தி இணக்கம் ஏற்பட முயற்சித்தும் பயன் இல்லை. கணவர் தான் விதிக்கும் முழு கட்டுபாட்டிற்கு மனைவி உடன்பட்டு தன்னோடு வரவேண்டும் என்றும், தான் அளித்த ( சமீபத்தில் வாங்கிகொடுத்த) டாலர், நகை, பணம் ஆகியவை திரும்ப வேண்டும் என்று கேட்டார். மனைவி தன் கணவர் மீது முழு நம்பிக்கை தன்மை இல்லாததால் அந்த நகைகளை கொண்டு வீடு மனை வாங்குவதானால் மட்டுமே தருவதாக சம்மதம் கூறினார். இருவரிடையே சமாதானம் செய்விக்க தற்போது இயலாத காரணத்தால் கணவன் மனைவி இருவருக்கும் இடையில் தமக்குள் சரியான புரிந்துணர்வு ஏற்படும் வரையில் தற்காலிகமாக இந்த பிரச்சனையை 6 மாதத்திற்கு ஒத்திவைத்து அது வரை கணவன் மனைவி இருவரும் அவர் அவர் வீட்டில் இருந்து கொள்ள வேண்டியது " என முடிவு செய்தார்களா என்றால் இல்லை.

4. எனது கணவருக்கும் அவரது அண்ணன் மனைவிக்கும் தகாத

உறவு இருப்பதாக நான் கூறியதற்கு ஆயப்பாடி பஞ்சாயத்தில் என்னை மன்னிப்பு கேட்க சொல்லி நான் மன்னிப்பு கேட்டேனா என்றால் இல்லை. இந்த பஞ்சாயத்திற்கு பிறகு நான் எதிர் மனுதாரருடன் அவரது வீட்டிற்கு சென்று வாழ்ந்தேனா என்றால் கொஞ்ச நாட்கள் வாழ்ந்தேன். எதிர் மனுதாரர் தனக்கென்று வீடு கட்டியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிர் மனுதாரர் வாங்கிவதைத்த மனையில் வீடு கட்ட கூடாது என்றும், நான் சொல்லும் மணிநகர் என்ற இடத்தில் தான் வீடு கட்ட வேண்டும் என்று சொன்னேனா என்றால் இல்லை.

5. எனது மனுவில் எனது கணவருக்கும் அவரது அண்ணன் மனைவிக்கும் தகாத உறவு இருப்பதாக சொல்வது அபாண்டமான பொய் என்றால் சரியல்ல. எனது விருப்பத்திற்கு உட்பட்டு எதிர் மனுதாரர் அவரது தந்தை வீட்டு மாடியில் என்னை குடிவைத்திருந்தார் என்றால் சரியல்ல. அதன் பிறகு நான் வற்புறுத்தியதன் காரணமாக என்னை வாடகை வீடு எடுத்து அங்கு வசித்து வந்தோம் என்றால் சரியல்ல. எனது கணவர் புது வீடு கட்டி அதில் நானும் அவரும் வசித்து வந்தோம் என்றால் சரியல்ல. எல்லா காலகட்டத்திலும் எனது கணவர் பணத்தை அவரது அண்ணனும்அண்ணியும் பிடுங்கிகொள்கிறார்கள் என்ற குற்ற சாட்டை வைத்து வந்தேன் என்றால் சரிதான். எனக்கு எனது கணவர் மாதம் ரூ.10,000/– கொடுக்க வேண்டும் என்று கேட்டேன் என்றால் சரிதான். பஞ்சாயத்தார்கள் மாதம் ரூ. 10,000/– கொடுக்க முடியாது என்றும், ரூ. 3000/– மட்டும் கொடுக்க வேண்டும் என்று கூறியதன் பேரில் எதிர் மனுதாரர் எனக்கு மாதம் ரூ. 3000/– கொடுத்து வந்தார் என்றால் சரியல்ல.

6. நான் பொறையார் காவல் நிலையத்தில் எனது மகனை காணவில்லை என்று எதிர்மனுதாரர் மீது புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். போலிசார் எனது கணவரையும் எனது மகனையும் விசாரித்த பிறகு அவர் கடத்தி செல்லவில்லை என்று எனது மனுவை முடித்து வைத்தார்கள் என்றால் எனதுமகன் எதிர் மனுதாரருடன் இருப்பதாக சொல்லி முடித்து வைத்தார்கள். போலிசார் விசாரணையில் போது எனது மகன் தானாக தான் எதிர் மனுதாரர்

வீட்டிற்கு சென்றதாக கூறினானா என்றால் கூறினான். எதிர் மனுதாரர் சொல்லிக்கொடுத்தன்பேரில் அவன் அவ்வாறு சொன்னான். அதன் பிறகு நான் சீர்காழி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எனது மகனை மீட்டுத்தர கோரி புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். சீர்காழி அனைத்து மகளிர் காவல் நிலையத்தார் பொறையார் காவல் நிலையத்தில் தொடர்பு கொண்டு பேசி உண்மையை அறிந்த பிறகு அந்த புகாரை முடித்தார்கள் என்றால் சரியல்ல. எனது மகனை இந்த வருடம் எதிர் மனுதாரர் தான் படிக்க வைத்து வருகிறார் என்றால் சரிதான். எனது மகன் என்னை பார்க்க வந்து செல்கிறானா என்றால் இல்லை. நான் எனது மகனுடன் போனில் பேசி வருகிறேனா என்றால் வருகிறேன். என்னை எதிர் மனுதாரர் திருச்சிக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றாரா என்றால் இல்லை.

7. மனநலம் வைத்தியரிடம் அழைத்து சென்று என்னை மருந்து மாத்திகைள் வாங்கி கொடுத்தாரா என்றால் தவறான மருத்துவரிடம் சென்று தவறான மாத்திரைகள் வாங்கி கொடுத்ததால் நான் சாப்பிடவில்லை. நான் எனது கணவர் வாங்கி கொடுத்த நகைகளையும் தங்க கட்டிகளையும் எனது அம்மா வீட்டிற்கு எடுத்து சென்றேன் என்றாலும், மீண்டும் எனது கணவர் வீட்டிற்கு வந்தால் அந்த நகைகள் மற்றும் தங்க கட்டிகளை அவர் கேட்பார் என்று பயந்து நான் எனது அம்மா வீட்டில் இருந்து விட்டேன் என்றாலும் சரியல்ல. நான் எனது கணவருடன் வாழ்ந்தால் எனக்கும் எனது குழந்தைளின் உயிருக்கும் ஆபத்து ஏற்படும் என கூறி இந்நீதிமன்றத்தில் விவாகரத்து கோரி அசல் வழக்கு எண். 85/2025 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் குடும்ப வன்முறை சட்டத்தை தவறாக பயன்படுத்தி எதிர் மனுதாரருக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.